DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE :27.10.2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of October 2022

Case No. OS.1/2022 Date: 27.10.2022

வாதி தரப்பு குறுக்குவிசாரணை

சாட்சி - G.பிரேம்ராஜ்

***குறுக்கு விசாரணை***

வாதியின் என்ன நிறுவனம் என்றால் Pro-biotic என்ற மருந்து தயாரிக்கும் நிறுவனம். அந்த நிறுவனம் தற்போது செயல்பட்டு வருகிறதா என்றால் இரண்டு நிறுவனங்களாக யெசல் பட்டு வருகிறது. நான் வாங்கிய இந்த வழக்கு சொத்தில் உரியமயாளர் யார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் வில்லங்கசான்றிதழ் பார்த்து நான் தெரிந்து கொண்டேன். நான் வழக்கு சொத்தினை வா.சா.ஆ 4 ஆவணம் மூலம் 05.12.1999 ல் மனோகர் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக 23.11.1996 மனனோகர் உமாமகேஷ்வரிடமிருந்து வழக்கு சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான் ஆனால் தேதி நினைவு இல்லை. 05.02.1996 அன்று உமாமகேஷ்வரி முனியப்பனிடமிருந்து ஒரு வழக்கு சொத்தினை வாங்கி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான் 24.07.1995 அன்று முனியப்பன் தேவராஜ் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான் 05.05.1995 ல் தேவராஜ் குப்புசாமி என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது.

அசல் வழக்கு எண்.507/1995 என்ற வழக்கினை சேலம் உரிமையியல் நீதிமன்றத்தில் தேவராஜ், கிருஷ்ணமூர்த்தி, தெய்வீகம், ராஜகோபால், ரவிக்குமார் ஆகியோர் பெயரில் அப்போதைய Power Agent ராஜேந்திரன் என்பவர் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

அந்த வழக்கு 28.11. 1995 ல் தள்ளுபடியான விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 507/1995 என்ற வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு இவ்வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல.

இவ்வழக்கில் IA.255/2022 என்ற மனுவில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு 17.03.2007 அன்று வழக்கு சொத்தினை பார்வையிட வந்தார் என்றால் பார்வையிட்டு வழக்கு சொத்தினை அளத்தார். கிராம நிர்வாக அலுவலர் அன்னறய தினம் வரவில்லை என்பதால் வழக்கு சொத்தினை அளக்கவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் வழக்கு சொத்தினை அளையாளம் காணமுடியவில்லை என்றால் சரியல்ல, வழக்கு சொத்து அடையாளம் காணப்பட்டது. அந்த ஆணையர் மனு (Not pressed) என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதியான உஷாசுந்தரம் 1983 லிருந்து 14.11.2002 வரை இந்தியாவில் இல்லை மற்றும் அவர் இந்தியாவுக்கு வரவில்லை என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. 11.04.1995 ல் உஷாசுந்தரம் விற்பனை செய்தாக சொல்லப்படும் பத்திரம் ஒரு போலி ஆவணம் என்றால் அது பற்றி வில்லங் சான்றிதழில் குறிப்பு ஏதும் இல்லை. குப்புசாமி உள்பட சிலர் மீது போலி ஆவணம் புனைந்தாக இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் எதிர் வழக்குரையை பார்த்து அறிந்து கொண்டேன். ரஞ்சிதம் என்பவர்தான் உஷாசுந்தரம் என்பவர் பெயரில் போலி கையெழுத்து செய்தார் என்றால் எனக்கு இருவரின் கையெழுத்தும் தெரியாது.

உஷாசுந்த்தின் கையெழுத்தை ஒப்பிடு செய்வதற்காக நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரி இந்நீதிமன்றத்தில் 352/2016 என்ற இடைநிலை மனுவை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். உஷாசுந்தரத்தின் கையொப்பம் அல்ல என்று குற்றவியல் நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு

8/2022 ல் தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரிந்து பின்பு நான் மனுவை (Not pressed) செய்தேன் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண். 507/1995 ல் தீர்ப்பாணை பிறக்கப்பட்ட பிறகு வழக்கு சொத்து முழுவதுமாக கம்பி வேலி இடப்பட்டது என்றால் இல்லை, இவ்வழக்கு சொத்தில் இடம் விற்பனைக்கு அல்ல என்ற விளம்பரம் வைக்கப்ட்டது என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தினை பார்வையிட வரும்போது கம்பிவேலி இருந்தாக என்றால் நாங்கள் போட்ட கம்பிவேலி இருந்தது.

வழக்கறிஞர்கள் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Take down by me in the open court to the presence of the Accused. Read over to the witness and admitted by him to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE :13.12.2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day of December 2022

Case No. OS.1/2022 Date: 13.12.2022

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

வா.சா.1 – G.பிரேம்ராஜ்

***குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி***

1) நான் தாக்கல் செய்த வில்லங்கசான்றிதழில் குறிப்பிட்டுள்ள அனைத்து சான்றிதழ்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுகுறித்து வழக்கறிஞருக்கு தான் தெரியும். வில்லங்க சான்றிதழில் இவ்வழக்குச்சொத்து குறித்து உள்ள அனைத்து ஆவணங்களும் போலியாக தயாரிக்கப்பட்டவை என்று இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண்.427/2003 ஆக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் அதுகுறித்து தெரியாது.

2) எதிர் வழக்குரையில் பத்தி 10–ல் 1ம் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட புகார் பற்றிய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியான உஷா சுந்தரத்தின் கையொப்பமும், குப்புசாமி என்பவருக்கு விற்கப்பட்ட ஆவணங்களில் உஷா சுந்தரம் கையொப்பமும் ஒன்றா அல்லது மாறுபட்டதா என்பது குறித்து சென்னையிலுள்ள தடய அறிவியல் நிபுணருக்கும் அதில் காணப்படும் கைரேகை குறித்து சேலம் தடய அறிவியல் நிபுணருக்கும் காவல் துறையால் அனுப்பப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3) குப்புசாமி என்பவருக்கு உஷா சுந்தரம் என்ற பெயரில் உள்ள கையொப்பம் வேறுபாடுடையது என்ற அறிக்கை பெறப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த அறிக்கை பெறப்பட்ட பின்பு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆண்டிபட்டிகை வழக்கு 08/2022 ஆக வழக்கு நடைபெற்று வருவது தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரைக்கு பதிலுரை ஒன்றை தாக்கல் செய்ய 1674/2013 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அது அனுமதிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

4) நான் தாக்கல் செய்த பதிலுரையில் மேற்படி குற்ற எண்.427/2003 என்ற வழக்கு கைவிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தற்போது ஞாபகமில்லை. அந்த பதிலுரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், மேற்படி குற்ற எண் கைவிடப்படவில்லை என்றும், கைரேகை நிபுணருக்கு அறிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5) பிரதிவாதிகள் தாக்கல் செய்த 1674/2013 பதிலுரையை தெரிந்த பின்பு தான் நான் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் மனு (கையொப்பம் சரிபார்க்க) திரும்ப பெற்றேன் என்றால் சரியல்ல. ஆதியில் இவ்வழக்கு சொத்து உஷா சுந்தரத்திற்கு பாத்தியப்பட்டது, அவர் குப்புசாமி என்பவருக்கு விற்பனை செய்ததாக சொல்லப்படும் ஆவணம் பொய் ஆவணம் மற்றும் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6) மேற்படி குப்புசாமி பிற நபர்களுக்கு அந்த சொத்தை விற்பனை செய்ததும், அந்த நபர்கள் மற்றவர்களுக்கு விற்பனை செய்ததும் ஒரு போலியான ஆவணம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சொத்து உஷா சுந்தரம் என்பவருக்கு உடைமையிலும், உரிமையிலும் இருந்து வருகிறது, குப்புசாமி உட்பட குப்புசாமியிடமிருந்து அச்சொத்தினை பெற்றதாக சொல்லப்படும் நபர்களும் வழக்குச்சொத்தில் எப்போதும் உடைமையில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

7) நான் வழக்குச்சொத்தினை மனோகரனிடமிருந்து பெற்றேன் என்றால் சரிதான், அவர் யார் எங்குள்ளார், உயிருடன் உள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. மனோகரன் வழக்குச்சொத்தினை யாரிடமிருந்து பெற்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் மனோகரனிடமிருந்து சொத்தை வாங்கியதாக சொல்லும்போது, அதில் சாட்சி கையொப்பமிட்டவர்கள் யார் என்று தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை.

8) அதில் ராபர்ட் என்பவரை தெரியுமா என்றால் ராபர்ட் அரசியலில் இருப்பதாக தெரியும். ராபர்ட் தான் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் ஞாபகமில்லை. ஆண்டுபட்டிகை வழக்கு 08/2022ல் ராபர்ட்–ம் ஒரு எதிரி என்றால் அதுபற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணத்தில் ராபர்ட் என்பவர் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான்.

9) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ஆவணத்தில் S.Robert, S/o.Soosai, Getwell cleanic என்பதன் கீழ் அடிக்கோடிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் அடிக்கோடிடவில்லை. வழக்குச்சொத்து மனோகர் என்பவருக்கு பாத்தியப்படாத நிலையில், அவரிடமிருந்து நான் பெற்றதாக சொல்லும் ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் மனோகரமிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்வதில் நான் அந்த சொத்தில் சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் இல்லை, 2007 வரை சுவாதீனத்தில் இருந்தேன்.

10) இவ்வழக்கின் ஆணையர் வரும்போது நான் சுவாதீனத்தில் இல்லாததால் தான் என்னால் வழக்குச்சொத்தினை அடையாளம் காட்ட இயலவில்லை என்றால் சரியல்ல. உஷா சுந்தரத்தின் அனைத்து சொத்துக்களும் வேலியிடப்பட்டுள்ளது என்றால் தற்போது தான் வேலியிடப்பட்டுள்ளது. தாவா சொத்தை நான் கிரைய ஆவணம் பெறுவதற்கு முன்போ பின்போ பார்க்காததால் தான் தாவா சொத்தை அடையாளம் காட்டமுடியவில்லை என்றால் சரியல்ல.

11) வெறும் வில்லங்கச்சான்றிதழை மட்டும் பார்த்து நான் சொத்தை வாங்கியுள்ளேன், அதிலும் வில்லங்கச்சான்றிதழை சரியாக பார்க்காமல் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குச்சொத்து பொய் ஆவணம் புனைந்தது என்று தெரிந்திருந்தால் நான் வாங்கியிருக்க மாட்டேன் என்றால் சரியாக இருந்தால்

தான் நான் கிரையம் பெற்றேன். என்னை ஏமாற்றி கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குச்சொத்தின் செக்குப்பந்தி எனக்கு தெரியுமா என்றால் தெரியும், வழக்குச்சொத்தின் இடதுபுறத்தில் கிராமப்புற சுற்றுசுவர் உள்ளது, முன்பக்கமாக மெயின் ரோடு உள்ளது.

12) 3080 சதுரடி, 770 சதுரடி என்ற இரண்டு அயிட்ட சொத்துக்கள் காண்பிக்கப்பட்டு தனித்தனியாக செக்குப்பந்தி உள்ளது என்றால் சரிதான். 770 சதுரடி நிலத்தின் கிழக்கில் ராஜா பட்டா நிலம், மேற்கு வடக்கில் உமா மகேஷ்வரி நிலமும், தெற்கில் பக்கோடா பாயின்ட் ரோடும் உள்ளது என்றால் சரிதான். கிழக்கில் உள்ள ராஜா என்பவர் 934/2003 என்ற விளம்புகை பரிகாரம் கோரி 1 மற்றும் 2ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் பவர் ஏஜென்ட் ராஜேந்திரன் ஆகியோர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு DFD என்ற முறையில் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இதுகுறித்து இவ்வழக்கின் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

13) மேற்படி அனைத்து தகவல்களும் தெரிந்துகொண்டு, இவ்வழக்கை நடத்துவதால் இவ்வழக்கு அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open court to the presence of the Accused. Read over to the witness and admitted by him to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.